DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.231/18

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name கணேசன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.01.23

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கே.கே.பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை செய்துவருகிறேன். 20.2.17 அன்று TN 60 F 6626 என்ற ஈச்சர் வண்டியில் மதுரையிலிருந்து கம்பத்திற்கு பழலோடு இறக்கிவிட்டு திரும்பு ஏற்றுவதற்காக வந்துக்கொண்டிருந்தேன். அப்போது வீரபாண்டி தெற்கே இறக்கத்தில் எதிரே வந்த TN 69 AD 2009 என்ற சைலோ கார் அஜாக்கிரதையாகவும், வேகமாகவும் வந்தது நான் அதை பார்த்து என் வண்டியை நிறுத்தினேன். நான் சென்ற வண்டியின் இடது பக்கம்மேற்படி கார் மோதி கார் பள்ளத்தில் உருண்டுவிட்டது. காரில் இருந்த ஒரு நபர் இறந்துவிட்டார். மேற்படி கார் தீப்பிடித்து எரியஆரம்பித்தது. காரில் உள்ளே இருந்தவர்களுக்கு கை, காலில் அடிப்பட்டது. எனக்கு நாடி, கை, கால் முன்னந்தலையில் அடிப்பட்டுவிட்டது. அதற்கு பிறகு ஆம்புலன்ஸ் வரவழைத்து என்னை ஏற்றி க.விலக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் அங்கு விசாரித்தார்கள். மேற்படி காரை சுதர்சன் சர்மா என்பவர் ஓட்டி வந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.